# முல்லைக்கலி உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் இரா.மாலினி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,

கோயம்புத்தூர்.

6

**ஆய்வின் நோக்கம்**

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். தமிழ் இலக்கியங்கள் மனிதனைச் சீரமைக்கும் பணிகளைச் செய்து வருகிறது எனலாம். இலக்கியங்களில் கூறப்படும் வாழ்வியல் சிந்தனைகள் மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது. மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் தற்கால வாழ்க்கைச் சூழலில் மதிப்பிழந்து சமூகத்தைப் பாதிப்படையச் செய்துள்ளது எனலாம். அத்தகைய சமூகத்தை மேம்பாடு அடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். குறிப்பாக சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் இடம் பெறும் முல்லைக்கலியில் காணலாகும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது. வாழ்வியல் ஒழுக்கம் என்பது நற்பண்பாகும். அத்தகைய நற்பண்புகளைக் காடும் காடு சார்ந்த பகுதியுமாகக் குறிக்கப்பட்ட முல்லை நிலத்தில் மனிதர்களின் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் எட்டுத்தொகை , பத்துப்பாட்டு என்று பகுக்கப்படுகின்றன. அடி வரையறை , பொருள் அமைப்பு , பா வகை ஆகியவற்றைக் கொண்டு இந்நூல்கள் பகுக்கப்பட்டுள்ளன . பண்டைத் தமிழ் மக்கள் தம் வாழ்க்கையை அகம் எனவும் புறம் எனவும் பகுத்தனர் . மக்களின் வாழ்வியலைப் பற்றிய செய்திகள் அடங்கிய பாடல்களில் காதல் பற்றிய பாடல்கள் அகம் எனவும் பிறருக்குப் புலப்படுத்தும் கொடை , வீரம், கருணை முதலிய உணர்வுகள் பற்றிய பாடல்களைப் புறம் எனவும் பிரித்தனர் . அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகையில் அமைந்துள்ள முல்லைக்கலி பாடல்களின் வழி அறியலாகும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது . ஐந்திணை ஒழுக்கங்களில் ஒன்றான முல்லைத்திணை சார்ந்த பாடல்கள் ஆயர் குல மக்களின் வாழ்வியல் நெறிகளை விளக்குகின்றது. ஆயர் குல மக்கள் தம் வாழ்வில் சிறப்பிடம் பெறும் ஆநிரை மேய்த்தல் , ஏறுதழுவுதல், ஆநிரைகளினின்றும் கிடைக்கும் பால் , தயிர், மோர் போன்ற பொருள்களை விற்றல் போன்ற தொழில்களையும் செய்துள்ளனர். ஆநிரைகளை அடக்கி ஆளும் வீரனை மகளிர் திருமணம் செய்து கொண்ட நிகழ்வும் , பறையறைந்து திருமண நிகழ்ச்சியைச் சொல்லுதலும் , திருமண விழா நடக்கும் வீட்டினை அலங்காரம் செய்தல் , ஆநிரைகளை வழிபடுதல் போன்ற நிகழ்வுகளையும் தம் பழக்க வழக்கங்களாகவும் வாழ்வியல் நெறிகளாகவும் முல்லை நில மக்கள் பின்பற்றியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

முல்லைக் கலி – ஆயர்கள் - ஏறுதழுவுதல் - திருமணம்- பழக்கவழக்கங்கள்- வீரம் - வாழ்வியல்முறை

**முன்னுரை**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என பிரிக்கப்பட்ட சங்க இலக்கியங்கள் பதினெண் மேல் கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன . எட்டுத்தொகையில் அமைந்த கலித்தொகையின் ஒரு பிரிவான முல்லைக்கலி பாடல்களின் வழி அறியலாகும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்து இயம்புவதாக இக்கட்டுரை அமைக்கப்படுகின்றது . கலித்தொகை பா வகையால் சிறப்பு பெற்ற நூலாகும். அகத்திணைச் சார்ந்த 150 பாடல்கள் ஐந்து புலவர்களால் பாடப்பட்டுள்ளது . 11 அடி சிற்றெல்லையாகவும் 80 அடி பேரெல்லையாகவும் உடைய அடிவரையரையினைக் கொண்டதாக அமைந்துள்ளது. கலி, கற்றறிந்தார் ஏத்தும் கலி , கல்வி வலார் கண்டகலி, குறுங்கலி என்னும் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்ற நூலாகும் . இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனார் ஆவார். அவற்றுள் முல்லைக்கலியைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் ஆவார் . 17 பாடல்களைக் கொண்டுள்ளது. காடும் காடு சார்ந்த பகுதியை முல்லை நிலம் என பகுத்துள்ளனர். காட்டுப்பகுதியில் வாழும் மக்கள் தம் வாழ்வியல் ஆதாரங்களாக ஆநிரைகளைக் கொண்டிருந்தனர் . இப்பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆயர்கள் , அவர்களின் வாழ்வியல் நெறிகள் , பழக்கவழக்கங்கள், வீரம் போன்றவற்றை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஏறுதழுவுதல்**

முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த பகுதியும் என்பதால் அங்கு வாழும் ஆயர்கள் புலி முதலிய கொடிய விலங்குகளிடமிருந்து தம் பசுக்களைக் காக்க வேண்டிய நிலையில் இருந்தனர் . தம் நாட்டின் எல்லைப் பகுதி காடு என்பதால் பகைவரின் தாக்குதலுக்கு உட்படுவதும் அப்பகுதியே ஆகும். ஆதலால் தம் நாட்டைப் பாதுகாக்க வீரம் உடையவர்களாக விளங்க வேண்டி இருப்பது இன்றியமையாததாக இருந்தது . எனவே ஆயர்களும் தன் மகளை மணக்க விரும்பும் ஆடவர்களும் வீரம் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என எண்ணினர் . அதன் காரணமாகவே ஏறுதழுவும் நிகழ்ச்சியையும் ஏற்படுத்தினர் . ஏறுதழுவுதல் என்பது சீறிப்பாயும் காளைகளைத் தழுவி அடக்குதல் ஆகும். சங்க கால மகளிர் தான் வளர்த்த மாட்டினை அடக்கும் ஆடவனைத் திருமணம் செய்துள்ளார் என்பதை முல்லைக்கலிப் பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளது . கார்காலம் மழை பொழிந்து ஈரம் பட்டிருக்கும் நிலத்தில் காய்ந்திருந்த பிடவ மலர்கள் பூக்கத் தொடங்கின . அந்நிலத்தில் காயா , பிடவம் போன்ற மலர்களை மாலையாகக் கட்டித் தலையில் அணிந்து கொண்டு வீரர்கள் தொழுவத்தில் ஒன்று சேர்ந்து புகுந்தனர் . அப்படி புகுந்த வீரர்களைக் கொம்பு சீவப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த பசுக்கள் தன் கொம்புகளால் குத்திக் கிழித்து தூக்கி வீசின . இந்நிகழ்வைக்கண்ட தலைவி தன் தலைவனை நினைத்து வருந்துகின்றாள் தன் தலைவனையும் இப்படித்தான் மாடு குத்தி கிழித்து விடுமோ என்றும் வருந்துகின்றாள் . ஆயினும் தன் கழுத்தில் மாலை அணிவிக்க கூடிய கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த ஏறுதழுவுதல் நடைபெற்றது . தன் தலைவன் ஆண் யானையைக் காட்டிலும் அஞ்சாத வீரம் கொண்டவனாக இருப்பான் . அப்படிப்பட்ட அஞ்சாத வீரம்

கொண்டவன் அந்த காளையை அடக்கித் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுவான். காளையைப் பிடிப்பதில் தனக்கு ஒப்பானவர்கள் யாரும் இல்லை என்று சொல்லும் அளவிற்குப் பசு கூட்டத்திற்குள் புகுந்து தன் செயல் திறத்தை வெளிப்படுத்தும் ஆயர் குல பொதுவனுக்கு உறவுக்காரி ஆகாமல் போகமாட்டேன். அவனைக் காண்பதற்கு உதவியாகத்தான் என் காளையுடன் என் கண்ணையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றேன் என்று தலைவி சொல்வதாக அமைந்த முல்லைக்கலி பாடலில் தன் தலைவனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏறுதழுவுதல் எனும் நிகழ்வு நடத்தப்பட்டிருப்பதை முல்லைக்கலி எடுத்துக்காட்டுகின்றது இதனை,

"கோளாள ரென்னொப்பா ரில்லென்ன நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கோளாள னாகாமை யில்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்"

(கலித்தொகை , முல்லைக்கலி, பாடல் எண்: 1, பாடல் வரிகள் : 43-46)

என்று தலைவி கூறுவதன் வாயிலாக தலைவனின் வீரத்தையும் பெண்களின் எதிர்பார்ப்பையும் முல்லைக் கலி எடுத்தியம்புகின்றது . இதன் வாயிலாக அக்கால மக்கள் ஏறுதழுவுதலை த் தன் வாழ்வியல் நெறிமுறைகளில் ஒன்றாகக் கருதியுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது . மேலும்

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்;
அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய வுயிர் துறந்து
நைவரா ஆயமகள் தோள்;

(கலித்தொகை , முல்லைக்கலி, பாடல் எண்: 3, பாடல் வரிகள் : 63-67)

எனும் வரிகள் கொல்லும் காளையின் கொம்புக்கு அஞ்சுபவனை ஆயர்குல பெண் இந்த பிறவியில் மட்டுமின்று அடுத்த பிறவியிலும் அணைக்க மாட்டாள் . கொல்லும் காளையை அஞ்சாமல் பிடித்து ஆள்பவர் அல்லாதவரை ஆயர் குலப்பெண் தழுவமாட்டாள் . தழுவ நேர்ந்தால் உயிர் துறந்து மாய்வாள் என்பதை முல்லைக்கலி பாடல் எடுத்துக்காட்டுகின்றது . இதன் மூலம் பெண்கள் வீர மறவர்களைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுள்ளனர் . அத்தகைய சிறந்த இல்லற வாழ்வை மேற்கொண்டிருந்தனர் என்பதும், ஏறுதழுவுதல் போரைத் தன் வாழ்வியல் மரபாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்து கொள்ள இயலுகின்றது.

**திருமண நிகழ்வு**

ஏறுதழுவுகளில் பங்கேற்று வெற்றி பெற்ற ஆடவன் திருமணத்திற்குத் தயாராகி அதன் அறிவிப்பை ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற நிகழ்வும் சங்ககால வாழ்வியலில் இடம்பெற்றுள்ளன என்பதை,

"ஓஓ! இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவ ரல்லால்
திருமாமெய் தீண்டல ரென்று கருமமா
எல்லாரும் கேட்ப அறைந்தறைந் தெப்பொழுதுஞ்

சொல்லாற் றரப்பட் டவள்

சொல்லுக, பாணியே மென்றா ரறைகென்றார் பாரித்தார்

மாணிழை யாறாகச் சாறு;"

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 2, பாடல் வரிகள் : 9-13)

எனும் முல்லைக்கலி பாடல் , விரிந்த வானம் மழை பொழிந்திருந்தது . பிடவப் பூக்கள் , தோன்றி, கொன்றை மலர்களும் பூத்துக் குலுங்கின . பெண்கள் கொன்றை மலர்களை மாலையாகவும் அணிகலன்களாகவும் தைத்து அணிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் தழைத்து விளையாடும் ஆயத்து மகளிர்கள் என் உயிரில் தன் உடம்போடு புகுந்திருக்கும் இவள் போரிடும் காளையைக் கைப்பற்றுபவரை அல்லாதவரைத் தன் திருமகள் போன்ற உடம்பால் தீண்ட மாட்டாள் என்று எல்லோரும் தெரியும்படி பறை மீண்டும் மீண்டும் சாற்றப்படும் . எப்போதும் சொல்லப்பட்டும் வளர்ந்து வருபவள் , எல்லோருக்கும் சொல்லுங்கள் ; பறையறைந்தும் சொல்லுங்கள் ; இவளுக்கு திருமண விழா என்று சொல்லுங்கள் என்று எடுத்துக்காட்டியுள்ளமை திருமண நிகழ்வைப் பறையறைந்து சொல்லுகின்ற வாழ்வியல் நெறியைப் பின்பற்றியிருந்தனர் என்பது புலுனாகிறது.

**வீரம்**

சங்ககால மக்கள் வீரத்தைத் தம் வாழ்வியல் நெறியாகப் போற்றியுள்ளனர் . முல்லைக்கலிப் பாடல்கள் அத்தகைய வீரத்தை எடுத்துக்காட்டியுள்ளன . ஆரவாரத்துடன் எதிர் சென்று கொல்லும் வில்லைப் போல் வளைந்திருந்த கொம்புகளையுடைய சினத்துடன் காளைகளின் மீது பாய்ந்து காளைகளை முட்டிக் கவிழ்த்தனர் . அதைக் கண்டு பலரும் கலங்கினர் . அவர்களுள் ஒருவன் மலரும் மகிழ்வுடன் மணிப்பூண் அணிந்த தன் தோள்களால் காளையின் திமிலை வளைத்துப் பிடித்துக் கொண்டு தோன்றினான் . காளையை வருத்தினா ல் அப்போது அந்த காளை படும் துன்பத்தைக் கண்ட மகளிர் இவனுக்குப் பகையாவரோ ? என்றும் இந்த பழக்கம் கொண்ட ஆயர் நேற்று நடந்த ஏறுதழுவுதல் போரில் காளை ஒரு பொதுவனைக் கொன்றது . இது தெரிந்திருந்தும் இன்றும் அந்தக் காளையைத் தழுவி போரிட்டு வெல்லும் ஏறுகோள் விழா எனப் பறைசாற்றி , காளையை விட்டிருக்கின்றனர். எது எப்படி இருந்தாலும் இன்று காளையை அடக்கி விட்டான் என்று முல்லைக்கலி எடுத்தியம்புவது அக்கால மக்களின் வீர வாழ்வியலை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது இதனை,

"அவருள் மலர்மலி புகலெழ அலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ

யெருதோ டிமிலிடைத் தோன்றினன் தோன்றி

வருத்தினான் மன்றவவ் வேறு;

ஏறெவ்வங் காணா எழுந்தா ரெவன் கொலோ

ஏறுடை நல்லார் பகை;"

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 2, பாடல் வரிகள் : 25-29)

என்ற முல்லைக்கலி பாடல் வரிகள் தன் வீரத்தினை எடுத்துக்காட்டும் ஆடவனின் வீர வாழ்வியல் நிலையை எடுத்துக்காட்டுகின்றது. அதுமட்டுமன்றி

"தொழீஇ! காற்றுப்போல் வந்த கதழ்விடைக் காரியை

ஊற்றுக் களத்தே யடங்கக்கொண் டட்டதன்
மேற்றோன்றி நின்ற பொதுவன் தகைகண்டை
யேற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டுச்,
சீற்றமோ டாருயிர் உயிர் கொண்டஞான் றின்னன்கொல்
கூற்றென வுட்கிற்றரறென் நெஞ்சு;"

(கலித்தொகை , முல்லைக்கலி, பாடல் எண்: 3, பாடல் வரிகள் : 40-45)

எனும் பாடல் வரிகள் காளை ஒன்று சினம் கொண்டு காற்று போல வந்தது . அதனை அவன் ஊற்று நீரைத் தடுப்பதைப் போல தடுத்து அடக்கி விட்டான் . அதன் மேல் ஏறி அந்த பொதுவன் சவாரி வருகிறான். இவனது பகைமையைப் பார் , உயிர் வாங்கும் எமன் எருமைக் கடாவின் மேல் வருவது போல வருகின்றான் பார்ப்பதற்கே அச்சமாக இருக்கின்றது என்று கூறுவதிலிருந்து சங்க கால ஆடவனின் வீர வாழ்வியலை எடுத்துக்காட்டும் களமாக ஏறுதழுவுதல் அமைந்திருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

**திருமணம் செய்யும் முறை**

முல்லைக் கலி பாடல்கள் ஆயர்குல மக்களின் திருமண முறையை எடுத்துக் காட்டுகின்றது.

"பொருவரும் பண்பி னவ்வையும் பிறவும்
உருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர், தொழூஉ; "

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 4, பாடல் வரிகள் : 15-18)

என்றும் காரி காளையின் சினத்துக்கு அஞ்சாமல் போரிட்டு வெல்பவன் இந்த ஒளிமிக்க வாரி முடித்த கூந்தலில் உறங்கலாம் . இந்த செங்கண் காளையைக் கொல்பவன் மானைப் போல் மருண்டு நோக்கும் இவளைப் பெறலாம் . மிகுந்த வலிமை கொண்ட இந்த சிவப்புக் காளையின் சினத்தை அடக்குபவன் மூங்கில் போன்ற தோள் கொண்ட இவளது தோளில் துயில் கொள்ளலாம் . இப்படி பறையறைந்து சொல்லி மகளீரை ஆயர்கள் முறைமுறையாக நிறத்தினர் . மீன்களுக்கு இடையில் தோன்றும் நிலாவைப் போல அணியணியாக நிறுத்தி வைத்தனர் என்றும் பறையறைந்தும் திருமண நிகழ்வை சொல்லிக் காளைகளை அவிழ்த்து விட்டனர் . அப்படி அவிழ்த்து விட்ட காளைகளை யார் அடக்கினார்களோ அவர்களுக்குத் தன்னுடைய மகளைத் திருமணம் செய்து தந்தனர் . திருமண அறிவிப்பு நிகழ்வை தம்முடைய வாழ்வியல் நெறியாக கொண்டிருந்தனர் என்பதை முல்லைக்கலி எடுத்தியம்புகின்றது. அதைப்போல காளைகளை அடக்கும் வீரர்களும் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள தன்னால் இயன்ற அளவு தன் வீரத்தைக் காட்டி காளைகளை அடக்கி வென்றுள்ளனர் என்கின்ற செய்தியும் முல்லைக்கலியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பிடிக்க முடியாத கொலைத் தொழில் மிக்க காளையின் சினத்தைப் பொருட்படுத்தாமல் பாய்ந்து அடக்கியவனையே நான் மணக்க விரும்பினேன் . ஊரார் தூற்றினாலும் அதை பொருட்படுத்தாமல் தன் பெற்றோர்கள் அவனுக்கே தன்னைத் திருமணம் செய்து வைத்தனர் . என்றெல்லாம் நாம் பாடி ஆடுவோம் என்று கூறுவதன் மூலம் திருமண வாழ்வு என்பது முறையாக முரசறைந்து அறிவித்து , வீரம் பொருந்திய ஆடவனுக்குத் தன் மகளை மணமுடித்துத் தந்துள்ளனர் என்பதும் காளையை

அடக்கும் வீரம் பொருந்திய ஆடவனைப் பெண்கள் மணந்துள்ளனர் என்பதை தம் வாழ்வியல் நெறிகளாக அமைத்துக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**தொழில் முறை**

ஆயர் குல மக்கள் நாள்தோறும் தங்களுடைய தொழிலாக ஆடு மாடு மேய்த்தல் , பால் கறத்தல், கன்றுகளை மேய்த்தல் , மோர் விற்றல் , கூடை பின்னுதல் , தயிர் கடைதல் , நெய் எடுத்தல் , நெய் விற்றல், போன்ற தொழில்களைச் செய்துள்ளனர் என்பதை முல்லைக்கலி பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"நின்னெஞ்சம் களமாக்கொண் டியாமலல் எமக்கெவன் எளிதாகும்;
புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளா னெந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ;"

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 8, பாடல் வரிகள் : 30-34)

எனும் பாடல் வரிகள் புனத்தில் இருக்கும் தந்தைக்குச் சோறு கொண்டு செல்வதும் தந்தைக்குப் பால் கறக்க பாத்திரம் கொண்டு செல்வதும் தினை வயல் பகுதிகளில் தாய் விட்டிருக்கும் கன்றுகளை மேய்ப்பதும் போன்ற அன்றாட வாழ்வியலை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது . மோர் விற்பவளின் அழகினை,

"இவள்தான் திருத்தாச் சுமட்டினள் ஏனைத் தோள்வீசி,
வரிக்கூழ வட்டி தழீஇ அரிக்குழை
ஆடற் றகையள் கழுத்தினும் வாலிது
நுண்ணிதாத் தோன்றும் நுசுப்பு;
இடைதெரியா ஏஎர் இருவருந் தத்த
முடை வனப் பெல்லா மிவட்கீத்தார் கொல்லோ
படையிடுவான் மன்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்;"

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 9, பாடல் வரிகள் : 13-20)

என்னும் முல்லைக் கலி பாடல் வரிகள் ஒழுங்கில்லாத சும்மாட்டோடு மோர் சுமந்து வருகிறாள் : தோள் வீசி நடந்து வருகிறாள் : அக்கத்தில் கூடை வைத்திருந்தாள் ; என்பதிலிருந்து மோர் விற்றல் தொழிலைத் தன் வாழ்வியல் ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. அது மட்டுமின்றி நாள்தோறும் தயிர் கடைதலையும் தன் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதைத் தலைவன் கூற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது . மேலும் நாள்தோறும் செய்யும் பணிகளாக தலைவியின் கூற்று வாயிலாகவே முல்லைக் கலி பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து, மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரும்

முல்லையுந் தாய பாட்டங்கால் தோழிநம்
புல்லினத் தயர் மகளிரோ டெல்லாம்
ஒருங்கு விளையாட"

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 11, பாடல் வரிகள் : 1-6)

எனும் பாடல் வரிகள் இனிய பாலைக்கரந்து , கலங்களை அவ்விடத்திலிருந்து எடுத்து வைத்தேன் . கன்றுகளை எல்லாம் தம்பால் பிணித்து வீட்டிற்குள் கொண்டு வந்து கட்டினேன் . தாய் தந்த பூந்தொழில் கரையுடைய நீல நிற ஆடையை இடையிலே தழுவுமாறு உடுத்திக்கொண்டு , முல்லைக் கொடி படர்ந்த தோட்டத்தில் நம் ஆட்டினத்து ஆயர் மகளிரோடு உடலை அசைத்து ஒரு சேர விளையாடினோம் என்று தலைவி தன் அன்றாட தொழில் முறையையும் வாழ்வியல் செயல்பாடுகளையும் எடுத்துக்காட்டியுள்ளமை ஆயர்குல மக்களின் நடைமுறை வாழ்வியலை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

**கற்பு நெறி**

தலைவிக்கு வேறு திருமணம் நடத்த வீட்டார் திட்டமிடுகின்றனர் . அதைப் பார்த்துக் கொண்டிருந்த தலைவி தோழியிடம் என் நிலைமை உனக்கு வந்ததாக எண்ணிக் கொண்டு அவரிடம் எடுத்துச் சென்று சொல் , விரைந்து செயல்படுமாறு எடுத்துரை , என் பெற்றோர்கள் என் திருமணத்திற்கு ஆவண செய்கின்றார்கள் . வீட்டு முற்றத்தில் புதுமணல் பரப்புகின்றனர் . வீட்டு சுவர்களுக்குச் செம்மண் பூசுகின்றனர் . என்னுடன் திருமணக் கொடையிகத் தர எருமைகளைக் கொண்டு வந்துள்ளனர் . நான் இங்கு தனிமையில் துன்புற்றுக் கொண்டிருக்கின்றேன் . அன்று ஆற்றன் துறைகளில் சிற்றில் இழைத்து விளையாடிய போதும் அழகிய ஆயர் பெண்கள் பலர் இருக்கும்போதும் அவன் என்னை மட்டும் தனியே அழைத்துச் சென்று உறவு கொண்டது அவனுக்கும் தெரியும். அப்படி இருக்கும்போது என்ன மனக்குழப்பத்துடன் இருக்கின்றாய் . இந்த உலகத்தையே கொடையாகப் பெற்றாலும் அறிய கற்பு நெறியைக் கடைப்பிடிக்கும் ஆயர் குல மகளிர்க்கு இரண்டு திருமணங்கள் நடைபெறுதல் இயல்பு அன்று என்று எடுத்துச் சொல் என்பதை

"திரு நுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
ஒரு மணந் தானறியு மாயின் எனைத்துந்
தெருமரல் கைவிட்டிருக்கோ அலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினும்,
அருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுதல் இல்லியல் பன்றே."

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 14, பாடல் வரிகள் : 16-21)

எனும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன் மூலம் சங்ககால பெண்கள் இரு ஆடவரை திருமணம் செய்து கொள்ளவில்லை . தான் மனதில் நினைத்த ஆடவனையே தன் கணவனாக அடையப் பெற்றனர். அவ்வாறு வாழ்ந்த பெண்கள் கற்பு நெறியுடனும் வாழ்ந்துள்ளனர் என்பதை இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பழக்கவழக்கங்கள்**

முல்லை நில மக்களின் பழக்கவழக்கங்கள் , வாழ்வியல் நெறிமுறைகள் போன்றவை முல்லைக்கலியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன . தயிர் மோருக்குப் பதிலாக நெல்பெறுவதும் மாங்காய் பெறுவதும் இது போன்ற பிற பொருள்களைப் பெறுவதும் பண்டமாற்று அடிப்படையில் வணிகம் நடைபெற்றுள்ளதையும் பெண்கள் மருத நிலத்தில் சென்று விற்று வருவதையும் காணமுடிகின்றது. ஆநிரை மேய்த்தல், ஏறுதழுவுதல் போன்ற தொழில்களும் அன்றாடம் வாழ்வியல் பழக்கங்களாக அமைந்துள்ளன. ஏறுதழுவி வெற்றி கொண்ட பின் குரவைக்கூத்து ஆடிய நிக ழ்வும் சிறப்புற முல்லைக்கலியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன . சந்தனக் குழம்பு கொண்டு பெண்களின் உடலில் தொய்யில் எழுதும் வரிக்கோலத்தை முல்லைக்கலி எடுத்துக்காட்டியுள்ளது . சிற்றில் இழைத்தல் எனும் மணல் வீடு கட்டும் நிகழ்வும் தங்களது வாழ்வியல் நெறிகளாக அமைத்துக் கொண்டுள்ள பாங்கினையும் முல்லைக்கலி எடுத்துக்காட்டுகின்றது . தம் வீட்டில் திருமண நிகழ்வின்போது வீட்டைச் சுத்தப்படுத்துதலும் இளமணலைப் பரப்பி பெண்கள் எருமை கொம்பை வீட்டில் வைத்து அதை தெய்வமாகவும் வழிபட்டுள்ளனர் என்பதை,

"தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி
எருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெரும் மணந் மெல்லந் தனித்தே யொழிய "

(கலித்தொகை, முல்லைக்கலி, பாடல் எண்: 14, பாடல் வரிகள் : 11-14)

என்னும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**முடிவுரை**

முல்லை நில மக்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதும் அவற்றைத் தங்கள் உடமைகளாகக் கொண்டிருந்ததையும் அறிந்து கொள்ள முடிகின்றது . ஆடு மாடுகளைப் பாதுகாக்க எருதினை அடக்கியாளும் திறம் வீரமாக கொள்ளப்பட்டுள்ளது . ஏறுதழுவுதல் என்பது தொழிலாகவும் வீரமாகவும் இருந்து வந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது . முல்லை நிலப் பெண்கள் ஏறுதழுவியவனை மணந்து கொள்ளும் வாழ்வியல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது . கற்பு நெறியுடன் வாழும் வாழ்வியல் நெறிமுறை அக்கால மகளிரிடம் இருந்து வந்துள்ளதை முல்லைக்கலி எடுத்தியம்புகின்றது. பெண்கள் பால் கறத்தல், தயிர் கடைதல், வெண்ணெய் எடுத்தல், மோர் வீற்றல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவதோடு , மேய்ச்சல் தொழிலையும் செய்துள்ளனர் என்பதை முல்லைக்கலி பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது . நன் நிமித்தம் பார்த்தல், திருமண வீட்டை அலங்காரம் செய்தல், சிறுகுடில், சிற்றூர்கள் வாழ்த்தல் ஏறுதழுவிய பின் வெற்றிக் கொண்டாட்டமாக குரவைக்கூத்து நடத்துதல் போன்றவற்றை முல்லை நில மக்களின் வாழ்வியல் நெறிகளாக முல்லைக்கலிப் பாடல்கள் பதிவு செய்துள்ளமையை அறிந்து கொள்ள இயலுகின்றது. ஏறுதழுவுதல், எருமைக் கொம்பை வழிபடல் , மூவினம் வளர்த்தல் , பால் மோர் விற்றல், விருச்சிகேட்டல், குரவைக் கூத்திடுதல் , வாழ்த்துதல் முதலியன முல்லைத் திணையின் சிறப்புகளாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. கலித்தொகை(நச்சினார்க்கினியருரையுடன்),கழகவெளியீடு,சென்னை,மூன்றாம் பதிப்பு:1999

2. சாமி சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அறிவு பதிப்பகம், சென்னை பதிப்பு: 2008

3. மா. ராசமானிக்கனார், தமிழர் வரலாறும் பண்பாடும் , அறிவு பதிப்பகம் , சென்னை பதிப்பு : 2008

4. தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம்- முனைவர் தேவிரா, ஸ்ரீநந்தினி பதிப்பகம், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை-101

5. சங்க இலக்கியம் மூலமும் உரையும் (கலித்தொகை) – அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம்.